# <u>அவசரக்கூட்டம்</u>

வெள்ளகோவில் நகராட்சியின் அவசரக்கூட்டம் 2021-ம் ஆண்டு பிலவ வருடம் அக்டோபர் மாதம் **08.10.2021–ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு** ஆணையாளர் / தனி அலுவலர் தலைமையில் நடைபெற்று, கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**<u>பொருள் எண் : 1</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/ஈஏ2–இல் வெளியிட்டுள்ளபடி, வெள்ளகோவில் நகராட்சியில் பொத சுகாதாரப் பணிகளை செயல்படுத்திட வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் அமர்த்த அளவுகோல் மற்றும் பொது விதிமுறைகளை பின்பற்றி கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியாளர் விவரம் விபரம் | அளவுகோல்கள்படி தேவைப்படும் பணியாளர்கள் | தற்போதுள்ள நிரந்தர பணியாளர்கள் | தேவைப்படும் பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| **<u>பொதுசுகாதாரப்பிரிவு</u>** | | | | |
| 1 | தூய்மைப் பணியாளர்கள் | 117 | 18 | 99 |
| 2 | துப்புரவு பணிமேற்பார்வையாளர் | 6 | 1 | 5 |
| 3 | ஓட்டுநர் | 13 | 1 | 12 |
| | **மொத்தம்** | **136** | **20** | **116** |

மேற்கண்ட அளவுகோலின்படி திடக்கழிவு மேலாண்மை பணிமேற்கொள்ள சுகாதாரப் பணியாளர்களை அமர்த்திக் கொள்ள செலவினம் ஓராண்டுக்கு ரூ. 255.25 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திக்கொள்ள உரிய கருத்துருவினை சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் வெளியிட்டுள்ள அளவுகோல் மற்றும் பொதுவிதிமுறைகளை முழுமையாக கடைபிடித்து தயார் செய்யப்பட்ட கருத்துருவிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(கோப்பு எண். 1334 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 2</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/ஈஏ2–இல் வெளியிட்டுள்ளபடி, வெள்ளகோவில் நகராட்சியில் குடிநீர் திட்டப்பணிகளை செயல்படுத்திட வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் அமர்த்த அளவுகோல் மற்றும் பொது விதிமுறைகளை பின்பற்றி கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியாளர் விவரம் விபரம் | அளவுகோல்கள்படி தேவைப்படும் பணியாளர்கள் | தற்போதுள்ள நிரந்தர பணியாளர்கள் | தேவைப்படும் பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| **<u>குடிநீர் திட்டப்பிரிவு</u>** | | | | |
| 1 | மின்னாளர் | 3 | 2 | 1 |
| 2 | பராமரிப்பு உதவியாளர் | 19 | 2 | 17 |
| | **மொத்தம்** | **22** | **4** | **18** |

மேற்கண்ட அளவுகோலின்படி குடிநீர் திட்ட பணிகளுக்கு தேவையான பணியாளர்களை அமர்த்த ஓராண்டுக்கு 50.66 இலட்சமும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திக்கொள்ள உரிய கருத்துருவினை சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1119 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

பொருள் எண் : 3

வெள்ளகோவில் நகராட்சிக்குச் சொந்தமான பொதுசுகாதாரப் பிரிவு வாகனங்களை TN 42 Y 3074, TN 33 AZ 7537 மற்றும் TN 33 A 7538 ஆகிய மூன்று வாகனங்களுக்கு ஆயுள் காப்பீடு புதுப்பிக்க யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் கோ. லிட் நிறுவனத்திற்கு கீழ்கண்டவாறு பிரீமியம் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வாகனம் எண் | இன்சூரன்ஸ் பிரீமியம் தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | TN 42 Y 3074 | 18735 |
| 2 | TN 33 AZ 7537 | 31013 |
| 3 | TN 33 AZ 7538 | 31011 |
| | மொத்தம் | **80759** |

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2021 / ஹெச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் : 4

வெள்ளகோவில் நகராட்சியில் பணிபுரிந்து வரும் பொதுசுகாதார தூய்மைப் பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர், ஓட்டுநர்கள், காவலர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியோர்களுக்கு தீபாவளிப் பண்டிகை 2021-2022–ஆம் ஆண்டிற்கு சீருடை துணிகள், தையல் கூலி மற்றும் காலனிகள் வாங்கி வழங்கவும், அவற்றை வாங்குவதற்கு ஆகும் உத்தேசெ சலவினம் ரூ. 1,25,000 /-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம். செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
2) பணியாளர்களுக்கு சீருடை துணிகள் அரசு நிறுவனமான கோ.ஆப்டெக்ஸில் வாங்கவும், காலணிகள் சர்வோதயா சங்கத்தில் வாங்கி வழங்கவும், பட்டியல் தொகையை இந்நிறுவனங்களுக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 814 / 2016 / ஹெச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

18/10/21

ஆணையாளர் /
தனி அலுவலர்
வெள்ளகோவில் நகராட்சி

18/10-21

# <u>அவசரக்கூட்டம்</u>

வெள்ளகோவில் நகராட்சியின் அவசரக்கூட்டம் 2021-ம் ஆண்டு பிலவ வருடம் அக்டோபர் மாதம் **29.10.2021–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு** ஆணையாளர் / தனி அலுவலர் தலைமையில் நடைபெற்று, கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**<u>பொருள் எண் : 1</u>**

இந்நகராட்சி குத்தகை இனங்களுக்கு 13.10.2021–ல் ஏலம் கோரபப்பட்ட ஒப்பந்தப்புள்ளி / ஏல அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடக் கோரியதன்படி, மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் திருப்பூர் அவர்களின் வெளியீட்டு ஆணை எண். 217 / 2021, நாள். 29.09.2021–ன்படி தினத்தந்தி நாளிதழ் பக்கம் எண். 09, நாள். 30.09.2021–ல் விளம்பரம் வெளி வந்தமைக்கு பட்டியல் தொகை ரூ. 10,206 /- வழங்கக் கோரி Bright Advertising நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1709 / 2019 / பி1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 2</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசாணை (நிலை) எண். 92, நாள். 03.07.2007–ன்படி நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 1842 / 2014 / அ3, நாள். 04.10.2021–ல் இந்நகராட்சிக்குச் சொந்தமான கடைகளின் குத்தகை காலம் 31.03.2021–ந் தேதியுடன் முடிவடைவதால், மேற்படி கடைகளுக்கு தற்போதைய நிலவரப்படி அங்காடி மதிப்பு நிர்ணயம் செய்து வழங்கப்பட்டுள்ள வாடகை மதிப்பின்படி இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண். 1380 / 2021 / அ3, நாள். 18.10.2021–ல் மேற்படி நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ள அங்காடி மதிப்பிற்கு குத்தகைதாரர்கள் 27.10.2021–ந் தேதிக்குள் மேற்படி கடைக்கு திருத்தப்பட்ட விகிதப்படி மாத வாடகைக்கு குத்தகையை புதுப்பிக்க சம்மதம் தெரிவிக்கக் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு சம்மதம் கடிதம் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | கடை எண் | குத்தகைதாரர் பெயர் | சம்மதக் கடிதம் நாள். | சம்மதம் தெரிவித்துள்ள மாத வாடகைத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | பே.நி.கடை எண். 9 | திரு. A. ஷேக்அலாவுதீன் 54 ஏ, கச்சேரிவலசு, வெள்ளகோவில் | 25.10.2021 | 11000 |
| 2 | பே.நி.கடை எண். 12 | திரு. M. ராஜேந்திரகுமார், த/பெ. முருகேசன், குமாரவலசு ரோடு, வெள்ளகோவில் | 27.10.2021 | 11000 |
| 3 | பே.நி.கடை எண். 13 | திருமதி. S. சுகந்தமாலா, க/பெ. சரவணசாமி, 443, உப்புப்பாளையம் ரோடு, வெள்ளகோவில் | 27.10.2021 | 11000 |

எனவே மேற்படி திருத்தியமைக்கப்பட்ட மாத வாடகையின் அடிப்படையில் குத்தகை மேலும் ஒன்பது வருடங்களுக்கு கால நீட்டிப்பு செய்ய பட்டியலில் காணும் குத்தகைதாரர்கள் சம்மதம் தெரிவித்துள்ளதன்பேரில் குத்தகை காலத்தை நீட்டிப்பு செய்யவும், மீதமுள்ள புதிய பேருந்து நிலைய கடை எண். 9, 12 மற்றும் 13 கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1380 / 2021 / அ3)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 3</u>**

மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண். 297 / செமதொஅ / 2021, நாள். 05.08.2021–ல் மாலைமலர் நாளிதழின் சார்பில் தமிழக அரசின் வளர்ச்சி திட்டங்கள் மற்றும் சாதனைகளை குறித்து தொழில்மலர் என்ற சிறப்பு மலர்களுக்கு தங்கள் துறையில் நடைபெற்ற திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளம்பரம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அரசின் 100–வது நாள் செயல்பாடுகள் குறித்து இந்நகராட்சியின் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் மனுக்களின் நடவடிக்கை விவரம் மாலைமலர் நாளிதழ் பதிப்பு நாள். 09.09.2021–ந் தேதிய (மாலைமலர் நாளிதழ்) தொழில் மலர் 2021 புத்தகம் பக்கம் எண். 77–ல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி தினசரி நாளிதழ் தொழில்மலர் புத்தகத்தில் விளம்பரம் வெளியிடப்பட்டமைக்கு பட்டியல் தொகை ரூ. 9975 /- வழங்கக் கோரி மலர் பப்ளிகேசன் பி லிட் நிறுவனத்தின் பட்டியல் (TRI-D21090066, நாள். 09.09.2021) வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 628 / 2021 / அ3)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 4</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்காணும் கடைகளில் மின்கட்டணம் செலுத்தாமல் மின்இணைப்பு துண்டிக்கப்பட்டும், சில கடைகளில் மின்இணைப்பு நிரந்தரமாக துண்டிப்பும் செய்யப்பட்டுள்ளன.

| வ.எண். | கடையின் விபரம் | மின்இணைப்பு எண் | தொகை |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய கடை எண். 2 | 086-001-1089 | 3914 |
| 2 | பேருந்து நிலைய கடை எண். 4 | 086-001-1091 | நிரந்தரமாக துண்டிக்கப்பட்டு உள்ளது |
| 3 | பேருந்து நிலைய கடை எண். 8 | 086-001-1095 | |
| 4 | வாரச்சந்தை முகப்பு கடை எண். 2 | 086-001-990 | ஏதுமில்லை |
| 5 | வாரச்சந்தை முகப்பு கடை எண். 3 | 086-001-989 | 920 |
| 6 | வாரச்சந்தை முகப்பு கடை எண். 4 | 086-001-985 | 934 |
| 7 | வாரச்சந்தை முகப்பு கடை எண். 11 | 086-001-2658 | 140 |
| 8 | வாரச்சந்தை முகப்பு கடை எண். 12 | 086-001-2659 | 140 |
| 9 | வாரச்சந்தை முகப்பு கடை எண். 13 | 086-001-2660 | 140 |
| 10 | வாரச்சந்தை முகப்பு கடை எண். 14 | 086-001-2661 | 140 |
| 11 | வாரச்சந்தை முகப்பு கடை எண். 15 | 086-001-2662 | 140 |
| 12 | தீத்தாம்பாளையம் கடை எண். 1 | 086-001-1782 | நிரந்தரமாக துண்டிக்கப்பட்டு உள்ளது |
| 13 | தீத்தாம்பாளையம் கடை எண். 3 | 086-001-1090 | |

மேற்படி மின்கட்டணம் செலுத்த வேண்டிய கடைகளுக்கு மின்கட்டணத்தை செலுத்தவும், நிரந்தரமாக துண்டிக்கப்பட்ட கடைகளுக்கு புதியதாக மின் இணைப்பு பெற மின்வாரியத்திற்கு விண்ணப்பிக்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

(கோப்பு எண். 703 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 5</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட மடாமேடு முதல் சொரியங்கிணத்துப்பாளையம் வரையிலான பகுதி மற்றும் தாராபுரம் ரோடு பகுதிகளில் குடிநீர் இணைப்பு கேட்டு விண்ணப்பித்துள்ளனர். இப்பகுதிகளில் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படவில்லை. எனவே குடிநீர் இணைப்பு வழங்க இயலாத நிலையுள்ளது. எனவே இப்பகுதிகளில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்ய வேண்டியுள்ளது அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 2,70,000 /- ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1537 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 6</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அலுவலகத்தில் உள்ள ஆய்வுக்கூடத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் ஒலிபெறுக்கிகள் பழுதடைந்த நிலையில் உள்ளதால், புதிய ஒலிபெறுக்கிகள் தேவைப்படுவதால், அதனை அமைத்திடவும் அதற்கான செலவினத்தை விதிமுறைகளுக்குட்பட்டு, இந்நகராட்சி பொதுநிதியில் ஈடு செய்து கொள்ளவும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அலுவலகக் கடிதம் ந.க.எண். 2825 / 2020 / பி1-2, நாள். 28.09.2021–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியினை மேற்கொள்ளவும், அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 3,85,000 /–ம் மன்றத்தின் ஒப்புதலுக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப் பணிக்கான செலவினத்தை விதிமுறைகளுக்குட்பட்டு நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1214 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 7</u>**

வெள்ளகோவில் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் துப்புரவு பணி செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி எண். K.Dis.No. 28369 / J3, நாள். 04.12.2018 அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 221 ஆகும். ஆனால் தற்பொழுது 18 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். குறைவான துப்புரவு பணியாளர்களே இருப்பதால் துப்புரவு பணி பாதிக்கப்படாமல் இருக்க இந்நகர்மன்ற தீர்மான எண். 289 / 2021, நாள். 29.09.2021–ன் படி 117 பேர் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் தனியார் மூலம் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 535 /- என்ற தினக்கூலி அடிப்படையில் இந்நகராட்சியில் 21 வார்டுகளிலும் துப்புரவு பணி செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.10.2021 முதல் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணி காலமானது 31.10.2021-ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திடமிருந்து 19.05.2021–ம் தேதிய கடிதத்தில் இப்பணி உத்திரவு ஒப்பந்த காலத்தை மேலும் ஓராண்டு காலம் நீடிப்பு செய்து தரவும் தற்பொழுது திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ந.க.எண். 5453 / 2019 / உ3, நாள். 11.08.2020-ன்படி (2020-2021) ஆம் நிதியாண்டுக்கான தினக்கூலி அடிப்படையில் கணக்கிட்டு ஊதியம் வழங்கவும் கோரி விண்ணப்பித்துள்ளார். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் K.Dis.No. 28369/J3, நாள். 04.12.2018-ன்கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின் அடிப்படையில் தேசிய தாழ்த்தப்பட்டோர் நலவாரியத்தால் அவ்வப்பொழுது நடத்தும் ஆய்வு கூட்டத்தில் தொடர்ந்து வலியுறுத்தப்படுவதாலும் அந்தந்த நிதியாண்டிற்கு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்பொழுது நிர்ணயம் செய்யும் தினக்கூலி தொகையுடன் EPF, ESI, சீருடை, பாதுகாப்பு உபகரணம், ஆயுள் காப்பீடு மற்றும் நிர்வாக கட்டணமும் கணக்கிட்டு ஊதியத்துடன் வழங்கவும், வெள்ளகோவில் நகராட்சியில் தற்பொழுது 18 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே உள்ளதால், இந்நகராட்சிக்குத் தேவையான துப்புரவு பணியாளர்களின் அளவுகோலில் (221 நபர்கள்) 10% குறைவாகவே உள்ளனர். நகராட்சியிலிருந்து பணியாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்ட ஊதியமானது நகராட்சி வருவாயில் 49 % குறைவாகவே உள்ளது. எனவே காலியாக உள்ள துப்புரவு பணியாளர்கள் பணியிடம் போதுமானதாக இல்லாததாலும், அத்தியாவசியப் பணியான துப்புரவு பணி பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தாலும், ஒப்பந்ததாரர் திரு. M/s. துரை அன்கோ அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் தினக்கூலி நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 535 /–ஐ ஏற்க மன்ற அனுமதி வேண்டியும், தொடர்ந்து இந்த நிறுவனத்தார் திருப்திகரமாக பணிகளை செய்து வருவதாலும், M/s. துரை அன்கோ விண்ணப்பத்தை ஏற்று மேலும் ஒரு மாத காலத்திற்கு மட்டும் (01.11.2021 முதல் 30.11.2021 வரை) 117 துப்புரவு பணியாளர்களை விநியோகம் செய்திட காலநீடிப்பு செய்திடவும், ஏற்கனவே உள்ள நிபந்தனைகளுடன் வரும் காலங்களில் அரசிடமிருந்தும், நகராட்சியிலிருந்தும் பிறப்பிக்கப்படும் அனைத்து நிபந்தனைகளுடன் சேர்த்து 117 ஒப்பந்த துப்புரவு பணியாளர்களை விநியோகம் செய்ய கொரோனா நோய் தொற்று ஊரடங்கு அமலில் உள்ள காரணத்தால் ஒப்பந்த புள்ளி கோர இயலாது என்பதால் M/s. துரை அன்கோ நிறுவனத்திற்கு ஒரு மாத காலம் பணி நீடிப்பு உத்தரவு வழங்க மன்றத்தின் முடிவிற்கு.

அலுவலககுறிப்பு

நகரின் தூய்மைப் பணி பாதிக்கப்படாமல் இருக்கும் நோக்கில் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு 01.11.2021 முதல் 30.11.2021 வரை ஒருமாதம் மட்டும் M/s. துரை அன்கோ நிறுவனத்திற்கு நீட்டிப்பு செய்யலாம்.

(கோப்பு எண். 469 / 2020 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 8**

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் 2021-22–ம் ஆண்டுக்கு கனரக வாகனங்களை இயக்க 4 நபர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் ஒப்பந்ததாரருக்கு 01.07.2021 முதல் இந்நகர்மன்ற தீர்மானம் எண். 290 / 2021, நாள். 29.07.2021–ன்படி ஒரு மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்து வழங்கிய வேலை உத்தரவு எதிர்வரும் 31.10.2021 –ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் தற்போதைய ஒப்பந்ததாரரான M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஊதியம் ஒரு நாள் ஒன்றுக்கு ரூ.595/–ஐ (சீருடை, பாதுகாப்பு உபகரணங்கள், ஆயுள் காப்பீடு தொகை மற்றும் EPF 13.61% உட்பட) ஏற்க மன்ற அனுமதி வேண்டியும் தொடர்ந்து இந்த நிறுவனத்தார் திருப்திகரமாக பணிகளை செய்து வருவதாலும், மேலும் ஒரு மாத காலத்திற்கு மட்டும் (01.11.2021 முதல் 30.11.2021 வரை) நான்கு ஒப்பந்த கனரக ஓட்டுநர்கள் சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு ஒரு மாத காலம் பணி நீடிப்பு உத்தரவு வழங்க மன்றத்தின் முடிவிற்கு.

அலுவலககுறிப்பு

பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு போதுமான ஓட்டுநர் இல்லாத காரணத்தின் அவசர அவசியம் கருதி நகரில் குப்பைகள் தேங்காவண்ணம் சுகாதாரமாக வைக்கவும், வெளிக்கொணர்வு மூலம் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு 01.11.2021 முதல் 30.11.2021 வரை நீட்டிப்பு செய்யலாம்.

(கோப்பு எண். 607 / 2018 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 9**

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி அலுவலக பொதுப்பிரிவில் 2021 -22–ம் ஆண்டுக்கு கணினிகளை இயக்க 3 நபர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் ஒப்பந்ததாரருக்கு 01.10.2021 முதல் ஒரு மாதத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 291 / 2021, நாள். 29.09.2021–ன்படி அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து வழங்கிய வேலை உத்தரவு எதிர்வரும் 31.10.2021 –ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் தற்போதைய ஒப்பந்ததாரரான M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஊதியம் ஒரு நாள் ஒன்றுக்கு ரூ.595/–ஐ (ஆயுள் காப்பீடு தொகை மற்றும் EPF 13.61% உட்பட) ஏற்க மன்ற அனுமதி வேண்டியும் தொடர்ந்து இந்த நிறுவனத்தார் திருப்திகரமாக பணிகளை செய்து வருவதாலும், மேலும் ஒரு மாத காலத்திற்கு மட்டும் (01.11.2021 முதல் 30.11.2021 வரை) மூன்று ஒப்பந்த தட்டச்சர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு ஒரு மாத காலம் பணி நீடிப்பு உத்தரவு வழங்க மன்றத்தின் முடிவிற்கு.

அலுவலககுறிப்பு

இந்நகராட்சிக்கு தட்டச்சர்கள் பணிநியமனம் இல்லாததால், அவசர அவசியத்தினை முன்னிட்டு, 3 வெளிக்கொணர்வு பணியாளர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு 01.11.2021 முதல் 30.11.2021 வரை நீட்டிப்பு செய்யலாம்.

(கோப்பு எண். 631 / 2018 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 10**

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு மாண்புமிகு நகராட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் 2021-22 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாக மானியக் கோரிக்கையின்போது வெள்ளகோவில் நகராட்சி மார்க்கெட்டுகள் மேம்படுத்தப்படுமென அறிவித்துள்ளார்.